உ
சிவமயம்



# அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானம்

## ஹேர்ணிங் டென்மார்க்

## இலட்சார்ச்சனை விஞ்ஞாபனம்

*10.06.2011 முதல் – 12.06.2011 வரை*

**‘திருவாக்குஞ் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்**
**பெருவாக்கும் பீடும் பெருக்குஞ் - உருவாக்கும்**
**ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்**
**காதலாற் கூப்புவர் தம்கை.’**

ஸ்ரீ சித்தி விநாயகப்பெருமான் மெய்யடியார்களே !

டென்மார்க் ஹேர்ணிங் மாநகரில் வீற்றிருக்கும் ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமானுக்கு நிகழும் கர வருஷம் வைகாசி மாதம் 27ம் நாள் (10.06.2011) வெள்ளிக்கிழமை முதல் இலட்சார்ச்சனை ஆரம்பித்து தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெற்று வைகாசி 29ம் நாள் (12.06.2011) ஞாற்றுக்கிழமை 108 சங்காபிஷேகத்துடன் பூர்த்தியாக விநாயகப் பெருமான் திருவருள் பாலித்துள்ளது.

இலட்சார்ச்சனை காலை 8.00 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி பகல் 1.00 மணி வரை இடம்பெற்று பின்னர் மாலை 5.00 மணிக்கு பூஜையுடன் ஆரம்பமாகி இரவு 8.00 மணி வரை தொடர்ந்து நடைபெறுவதுடன் (12.06.2011) ஞாற்றுக்கிழமை அன்று காலை 8.00 மணிக்கு சங்காபிஷேகத்துடன் இலட்சார்ச்சனை ஆரம்பமாகி பகல் 1.00 மணி வரை இடம்பெறும். மாலை 5.00 மணி பூஜையுடன் இலட்சார்ச்சனை பூர்த்தியாகி இரவு 8.00 மணிக்கு எம்பெருமான் வீதி உலாவரும் காட்சியும் இடம்பெறும்.

உற்சவகுரு: **கிரியாவித்தகர் சிவஸ்ரீ. நடராஜ ஸ்ரீகாந்தக்குருக்கள் B.Sc.(Cey)**
சர்வசாதகர்: **பிரம்மஸ்ரீ. ஸ்ரீ. சதீஷ்குமாரசர்மா M.Sc.E.E.**
சிவஸ்ரீ. ம. கணேசக்குருக்கள் பிரம்மஸ்ரீ. இ. ஜெயமுரளிசர்மா பிரம்மஸ்ரீ. ஸ்ரீ. சுதர்ஷனசர்மா.
பிரம்மஸ்ரீ. வி. சுபாங்கன்சர்மா.

இச்சிறப்பு வாய்ந்த இலட்சார்ச்சனை வழிபாட்டில் அனைத்து மக்களும் கலந்து கொண்டு, எம் பெருமானுடைய திருவருளைப் பெறுமாறு கேட்டுக் கொள்வதுடன், இவ். இலட்சார்ச்சனையில் உபயகாரர்களாக இணைந்து கொள்ள விரும்பும் அடியார்கள் தமது பெயர்களை முன்கூட்டியே எமது காரியாலயத்தில் பதிவு செய்து கொள்ளுமாறும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**முக்கியகுறிப்பு: பூசைத்திரவியங்கள் கொடுக்க விரும்புபவர்கள் பூசைநேரத்திற்கு முன்பு கொடுத்துதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம். அத்துடன் தினமும் மஹேஸ்வரபூசையும் இடம்பெறும்.**

பூசைத் தொடர்புகளுக்கு: 97213769 20863769.
மேலதிக தகவல்களுக்கு: 97225511 97217199 97215715

இங்ஙனம்
ஆலய பரிபாலனசபை.

**ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானம்**
Teglvænget 93 Post-Box-317
7400 Herning
Denmark
www.pillayar.dk